# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
************

**மனு எண்: 1304/2017 பேரூ 2**

**ஆணை எண்: 45 /2018நாள்: 05 /03/2018**

**திரு. து. பாலசுப்பிரமணியம்,**
**த/பெ. பெ. துளசிநாதன்,**
**க. எண்.3–1–93/1,**
**குமுளி பெரியகுளம் சாலை,**
**பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம்.** **– மனுதாரர்**

திரு. து. பாலசுப்பிரமணியம் என்பவரது 18.09.2017 நாளிட்ட மனு, 18.09.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப் படுகிறது:-

## ஆணை

இம்முறைமன்ற நடுவ ஆணை எண். 116/2017 நாள்: 20.05.2017ல், முறையீட்டு மனுதாரர் திரு. A. மிதுன் சக்கரவர்த்தி என்பவரது வாக்குமூலம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவரது கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில், விதிகளை மீறி கட்டப்பட்ட, இம்மனுதாரர் திரு. து. பாலசுப்பிரமணியம், முன்னாள் பேரூராட்சி தலைவர் மற்றும் திரு. உதயசூரியன், முன்னாள் பேரூராட்சி துணைத்தலைவர் ஆகியோரது கட்டிடங்கள் தொடர்பாக தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

மேற்படி ஆணையினை எதிர்த்து இம்மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடர்ந்த நீதிப் பேராணை எண்.12225/2017ல் 01.08.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் தனது மேல்முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தில் தற்போது தாக்கல் செய்வதாகத் தெரிவித்து தனது 18.09.2017 நாளிட்ட மனுவினை, மனுதாரர் திரு. து. பாலசுப்பிரமணியம் என்பவர் தாக்கல் செய்துள்ளார்.

மேற்கண்ட மனுவில் மனுதாரர், தனக்கு வீரபாண்டி கிராமம் சர்வே எண். 1432/3 பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, வார்டு-3, குமுளி-பெரியகுளம் சாலை, கிழக்கு புறம் 3504 சதுரடி அளவுள்ள இடம் உள்ளது என்றும், மேற்படி இடத்தில் தரைதளம் 517 சதுர அடி அளவிலும், முதல் தளம் 517 சதுர அடி அளவிலும், குடியிருப்பு கட்டிடம் கட்ட பேரூராட்சி நிர்வாகத்திடம் க.உ.எண்.39/2001-02ன் நாள்:2/8/2001 படி அனுமதி பெற்று அதனை கடையாக கட்டியுள்ளதாகவும் அப்பிழையினை பொருத்தருள வேண்டுவதாகவும், மேற்படி கட்டுமானத்தினை அரசு ஆணை எண். 110, மற்றும் 111 வீட்டு வசதி மற்றும் நகர்புறமேம்பாட்டு (UD4(3)) துறை நாள்: 22/6/2007ன் படி முறைபடுத்திட விண்ணப்பித்துள்ளதாகவும், மேலும் சர்வே எண்ணில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி கட்டிட உரிமம் எண். 124/2012/2013 நாள்: 16/2/2012ன் படி 1982.12 சதுரடி அளவில் வணிக கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளதாகவும், இந்நிலையில் 2011-ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் தன்னை எதிர்த்து தலைவர் தேர்தலுக்கு போட்டியிட்டு தோல்வியுற்ற திரு. V.P. அம்மாவாசை, என்பவர் தனது மகன் திரு. மிதுன்சக்கரவர்த்தி என்பவர் மூலம் விரக்தியில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தான் பேரூராட்சி மன்றத்தலைவர் பதவியை வைத்து அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்பட்ட புகாரில் தன்னை விசாரிக்காமலேயே இம்முறைமன்ற நடுவம் ஆணை வழங்கியுள்ளது என்றும், இதனை ஆட்சேபித்து தன்னால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடுக்கப்பட்ட வழக்கில் (WP(MD)) 12225/2017 and 9403 & 9404/2017)1/8/2017-ம் நாள் வழங்கப்பட்ட தீர்ப்பில் மீள மனு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது என்றும், எனவே இம்முறைமன்ற நடுவம் மேற்படி தீர்ப்புரையை மறு பரிசீலனை செய்து தன்னையும் விசாரித்து நீதிவழங்கிடவேண்டி மேற்படி உத்தரவினை மறு பரிசீலனை செய்திட வேண்டி இம்மேல் முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மேற்கண்ட மனுவின் அடிப்பகுதியில், குறிப்பில் கீழ்க்காணும் உறுதியினையும் அளித்து கையொப்பமிட்டுள்ளார்:

“.. . 1.8.2017 நாளிட்ட நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள 20.5.2017 நாளிட்ட தனது மேல்முறையீடு மற்றும் 17.7.2017 நாளிட்ட ஆணையின் நகலினையும் ஒரு வார காலத்துக்குள் அனுப்பி வைக்கிறேன் என தெரிவித்துக் கொள்கிறேன்”.

இப்பொருள் குறித்து மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கில் (நீதிப்பேராணை எண். 12225 / 2017) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வினால் 01.08.2017 அன்று பகரப்பட்ட தீர்ப்புரையில் கீழ்க்கண்டுள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

“.. . The petitioner filed this writ petition to direct the first respondent to dispose of the **appeal stated to have been filed on 20.05.2017.**

2. When the writ petition is taken up for admission, the learned Additional Government Pleader by placing reliance on a copy of the **proceedings dated 17.07.2017**, submitted that the appeal has already been returned for rectification.

3. In view of the return of the appeal, there is no question of issuing a direction for disposal of the appeal.

4. In the result, the writ petition is dismissed. However, we make it clear that this order would not stand in the way of the petitioner from representing the appeal. No costs. Consequently, the connected Miscellaneous Petitions are closed".

மேற்குறிப்பிட்ட நீதிமன்ற ஆணைகள் அடிப்படையில், இம்முறைமன்ற நடுவத்தில் தான் மீள மனு செய்துள்ளதாகத் தெரிவித்து தன்னையும் விசாரித்து, முறைமன்ற நடுவ 20.05.17 ஆணையை மறு பரிசீலனை செய்திட வேண்டுமென மனுதாரர் கோரியுள்ளார்.

01.08.2017 நாளைய மாண்பமை நீதிமன்ற தீர்ப்புரையில் பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள, இம்முறைமன்ற நடுவத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள 20.05.2017 நாளிட்ட மேல்முறையீடு (appeal) ஏதும் இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெறவில்லை. மேலும் மேற்படி நீதிமன்ற ஆணையின் பத்தி 2ல் மேற்கண்ட மனுதாரரது மேல்முறையீடு 17.07.2017 நாளிட்ட செயல்முறைகள் மூலம் உரிய திருத்தங்களுக்காக மனுதாரருக்கு திருப்பப்பட்டுள்ளதாக கூடுதல் அரசு வழக்குரைஞர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய செயல் முறைகள் ஏதும் இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்படவில்லை. 20.05.2017 நாளிட்ட மனுதாரரது மேல்முறையீடே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்படாத நிலையில் மேற்குறிப்பிட்ட 17.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணை ஏதும் இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்படவில்லை, அத்தகைய நிலையும் ஏழவில்லை.

இந்நிலையில் மனுதாரர் தனது 18.09.2017 கடிதத்தில் உறுதி அளித்ததற்கு மாறாக அதே கடித நகலினை, ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைப்பதாக தெரிவித்திருந்த 20.5.2017 நாளிட்ட தனது மேல் முறையீட்டின் நகல் மற்றும் 17.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணை நகல் ஏதும் இணைக்காமல், முதல் கடிதத்தில் அளித்திருந்த சான்றினையும், தேதியினையும் குறிப்பிடாமல் தபால் மூலம் அனுப்பி வைத்தார். இப்பொருள் தொடர்பாக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கை ந.க.எண். 765/2017/பேரூ.3/ நாள். 19.10.2017ல் கீழ்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"... தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் முறையீட்டு மனு எண்.989/2017/பே2 நாள்: 08.09.2017ல், தேனி மண்டலம், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியினைச் சார்ந்த திரு. து. பாலசுப்பிரமணியம் என்பவரது மனுவின் மீதான குறிப்புரையினையும், முறைமன்ற நடுவத்தின் 20.05.2017 ஆம் நாளிட்ட ஆணை எண்.116 ன் படி விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் மீது உரிய சட்ட விதிகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை குறிப்புரையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது..

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியின் முன்னாள் தலைவரான திரு. து.பாலசுப்பிரமணியம் என்பவர், அவருக்கு சொந்தமான இடத்தில் பின்வருமாறு கட்டடம் கட்டிடக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | சர்வே எண். | கட்டட அனுமதி ஆணை எண். | கட்டட அனுமதி வழங்கப்பட்ட பரப்பளவு | கட்டட அனுமதிக்கான காலம் |
|---|---|---|---|---|
| 1. | 1432/3 | 39/2001–02 நாள்: 2.08.2001 | குடியிருப்பு கட்டிடம் தரைதளம் – 517 முதல்தளம் – 517 | 02.08.2001 முதல் 01.08.2004 வரை |
| 2. | 1432/3 | புதுப்பித்தல் 39/2001–02 நாள்: 2.08.2004 | குடியிருப்பு கட்டிடம் தரைதளம், முதல்தளம் | 02.08.2004 முதல் 01.08.2007 வரை |

மேற்காணும் விவரப்படி, குடியிருப்பு நோக்கத்திற்காக, கட்டட அனுமதி பெறப்பட்ட கட்டடத்தினை, கட்டடத்தின் உரிமையாளரான திரு.து.பாலசுப்பிரமணியன் என்பவர் விதிகளுக்கு முரணாக, வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தி வருகிறார். இவ்வாறு கட்டட விதிகளுக்கு முரணாக கட்டடம் கட்டப்பட்டது தொடர்பான புகார் குறித்தும், முறைமன்றம் நடுவம் அளித்த ஆணையினைத் தொடர்ந்து, பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக, திரு.து.பாலசுப்பிரமணியம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் WP(MD) No.12225/2017 மற்றும் WMP(MD) No. 9404/2017ன் படி வழக்கு தொடரப்பட்டு 13.06.2017 ல் தடையாணை பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது கட்டடத்தினை தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண். 110 மற்றும் 111 வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர மேம்பாட்டுத்துறை நாள்: 22.06.2017 ன் படி வரன்முறை செய்ய, நகர் ஊரமைப்புத்துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி வேண்டப்பட்டுள்ளது. இவரது விண்ணப்பத்தினை மதுரைமண்டல நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரது கடிதம் ந.க.எண்.1872/2017/மம3 நாள்: 17.08.2017 இன்படி பரிசீலனை செய்து பின்வருமாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது:–

“அரசாணை எண். 110 மற்றும் 111, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 22.06.2017ன்படி 01.07.2017க்குமுன்னர் கட்டப்பட்ட கட்டுமானங்களுக்கு வரன்முறைப்படுத்த குறிப்பிட்டுள்ள தேவையான ஆவணங்களை தயார் செய்து விண்ணப்பத்தினை www.tn.gov.in/tcp என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தும் ஒப்புதல் பெற்ற அறிக்கையுடன் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மூலமாக உத்தேசம் பெறப்பட வேண்டும் என்ற விவரம் தெரிவித்து, பெறப்பட்டவைகள் பரிசீலனையின்றி திருப்பப்படுகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது...”.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்த்தில் முறையீட்டு மனுதாரர் தொடர்ந்த வழக்கினை W.P(MD).No. 12225/2017 மற்றும் WMP(MD) No. 9403/2017 மற்றும்

WMP(MD)No.9404/2017 நாள் 01.08.2017ல் தள்ளுபடி செய்து பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது :-

" In view of the return of the appeal there is no question of issuing of direction for disposal of the appeal.

In the result the writ petition is dismissed. However, make it clear that this order would not stand in the way of the Petitioner from representing the appeal. No costs consequently the connected miscellaneous petitions are Closed.'

மேற்காணும் விவரங்களினடிப்படையில் விதி மீறல் செய்யப்பட்ட கட்டடங்களை வரன்முறை செய்ய தற்போதைய நிலையில் மனுதாரரால் **விண்ணப்பம் ஏதும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை** என்பதுடன், நீதிமன்ற தடையாணை நிலையில் இல்லை என்ற விவரம் குறிப்புரையாக சமர்ப்பிக்கப்டுகிறது.

மேலும், முறைமன்ற நடுவத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டவாறு, இப்பேரூராட்சியின் முன்னாள் துணைத்தலைவரான திரு. பொ.உதயசூரியன், என்பவரால் விதிமீறல் செய்யப்பட்ட கட்டடங்களைப் பொருத்தவரையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணை எண். WP(MD) No.4376, 13531 and 14291 of 2017 நாள்: 23.08.2017ன் ஆணையின்படி விதிமீறல் செய்யப்பட்ட கட்டடப் பகுதியினை, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 56 ன்படி வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலர், நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அலுவலக கண்காணிப்பாளர், பழனிசெட்டிபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர், ஆகியோர் முன்னிலையில், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 24.08.2017ல் சீல் வைத்து பூட்டி முத்திரையிடப்பட்டுள்ளது என்பதையும் புகைப்படங்களை இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களின்படி இப்பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திரு. து. பாலசுப்பிரமணியம் என்பவரின் மனுவினைப்பொருத்தவரையில், மனுதாரரால் விண்ணப்பம் ஏதும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், நீதிமன்ற தடையாணை நிலையில் இல்லை. முன்னாள் துணைத்தலைவரான திரு.பொ.உதயசூரியன் என்பவரின் விதிமீறல் கட்டிடங்களைப் பொருத்தவரையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் ஆணை எண். WP(MD) No.4376, 13531 and 14291 of 2017 , நாள்: 23.08.2017 ன் ஆணையின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 56 ன்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது", என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிக்கையின்படி மனுதாரர் தனது விதி மீறல் கட்டடங்கள் வரன்முறை குறித்து முறையாக சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கவில்லை என்பது புலனாகிறது. ஆனால், குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கடையாக கட்டியுள்ளதை பொறுத்தருள வேண்டுமென கேட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார். இதுகுறித்து இம்முறைமன்ற நடுவம், சட்ட / விதிகளின்படி எவ்வித ஆணையும் பிறப்பிக்க இயலாது.

மேலும், மனுதாரர் ஆட்சேபித்துள்ள இம்முறைமன்ற நடுவ ஆணை எண். 116/2017, நாள்:20.05.2017ஐ எதிர்த்து பழனிசெட்டிபட்டி பேரூராட்சியின் முன்னாள் துணைத் தலைவர் திரு.பொ.உதயசூரியன் என்பவர் தொடர்ந்த வழக்கில் (நீதி பேராணை எண். 13531/2017) மாண்பமை நீதி மன்றத்தால் 28.08.2017 அன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைக்கப்பட்டுள்ளது:-

"... 11. The Order passed by the Tamil Nadu Local Body Ombudsman, dated 20th May 2017, indicates that action was recommended against the concerned officials. There was no direction as such against the builder. We, therefore, do not find any reason to quash the impugned order dated 20th May, 2017. We make it clear that in case further action is taken, pursuant to the order dated 20th May, 2017, it is open to the concerned officials to defend the proceedings in accordance with law.

12. The Local Planning Authority has already taken action against the builder by locking and sealing the premises. The question of demolition of the illegal structure would depend upon the orders to be passed by the Town and Country Planning Department.

13. The Writ Petitions in W.D (MD) Nos.4376 and 13531 of 2017 are disposed of with the above observation and direction...."

இருப்பினும், நீதி பேராணை எண். 12225/2017ல், 01.08.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட மாண்பமை நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க மனுதாரரின் 18.9.17 நாளிட்ட மனுவினை ஏற்று 14.12.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கத்தினை அளிக்குமாறு தெரிவித்து 20.11.17 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் அனுப்பப்பட்டது. மேலும் மேற்படி அழைப்பாணையில் 18.09.2017 நாளிட்ட மனுதாரரது மனுவில் உறுதியளித்தவாறு 20.05.2017 ஆம் நாளிட்ட அவரது மேல்முறையீடு மற்றும 17.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணை நகல்களை தாக்கல் செய்யுமாறும், வேறு ஏற்புக்குரிய ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் தாக்கல் செய்யலாமெனத் தெரிவித்தும் ஆணையிடப்பட்டது.

அதன்படி 14.12.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை இம்முறைமன்ற நடுவத்தின் முன் தாக்கல் செய்தார்:-

"... 18.09.2017 நாளிட்ட மனு என்னால் அனுப்பப்பட்டது. அதில் வீரபாண்டி கிராமம் சர்வே எண். 1432/3 ல் பழனிச்செட்டிபட்டி பேரூராட்சி வார்டு 3 ல் உள்ளது. இதில் தரைதளம் 517 சதுரஅடி அள்விலும் முதல் தளம் 517 சதுஅரடி அளவிலும் குடியிருப்பு கட்டிடம் கட்ட பேரூராட்சி நிர்வாகத்திடம் 2.8.2001 ல் அனுமதி பெற்று அதில் நான் கடையாக கட்டி உள்ளேன். அதனுடைய மொத்த நிலபரப்பு 3,504 சதுரஅடி ஆகும். தற்போது 22.6.2016ல் வரைமுறை குறித்து இடப்பட்ட அரசு ஆணை 110 மற்றும் 111 ன் படி வரைமுறை செய்திட கொடுத்துள்ளேன். அதே சர்வே எண்ணில் ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டித்தை ஒட்டி கட்டிடம் கட்டி உள்ளேன். உரிமை எண். 124, 16.2.2012ன்படி 1,982.12 சதுரஅடி அளவில் வணிக கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டி உள்ளேன். இதற்கு வரி விதிப்பு 2012-ஆம் ஆண்டில் பேரூராட்சியால் வரி வதிப்பு செய்யப்பட்டுள்ளது . ஆனால் எவ்வளவு ரூபாய் என்று

எனக்கு ஞபாகம் இல்லை 2012 ஆண்டு கட்டிய கட்டிடத்தை வரி விதிப்பு செய்யப்பட்டது. 2001-ஆம் ஆண்டு நான் அனுமதி பெற்று கட்டிய கட்டிடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்படாமல் இருக்கிறது. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் நான் பேரூராட்சியுடைய தலைவராக மனுதாரருடைய தந்தையை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றேன். என்னால் முதலில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No.12225/2017 மற்றும் W.M.P. M.D No. 9404/2017 என்ற வழக்கில் எதிர் மனுதாராக உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திரு. மிதுன் சக்கர்வாத்தி ஆகியோரை எதிர் மனுதாராக குறிப்பிட்டு ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் ஒரு இடைக்கால தடை பெறப்பட்டது. இதே வழக்கில், இதே நீதிமன்றத்தில் W.P (MD) No. 12225 /2017, மற்றும் W.M.P 9403 மற்றும் 9404 /2017ல் என்னுடைய முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அதில் மனுதாரர் மேல் முறையீடு செய்வதற்காக இந்த ஆணை தடையாக இருக்காது எனக் குறிப்பிட்டு ஆணையிடப்பட்டது. இதற்கு பிறகு தான் என்னால் மேல் முறையீடாக 18.9.2017 அன்று ஒரு முறையீடு மனு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் 1.8.2017 நாளிட்ட நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள **20.5.2017 நாளிட்ட தனது மேல் முறையீடு மற்றும் 17.7.2017 நாளிட்ட ஆணை** ஆகியவற்றின் நகலை ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைக்கிறேன் என குறிப்பிட்டு இருந்தேன். தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் 20.5.2017ல் போடப்பட்ட ஆணையின் நகலை சமர்ப்பித்துள்ளேன். 17.7.2017 நாளிட்ட ஆணை நகல் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்து கொள்கிறேன். நான் தற்பொழுது சமர்ப்பித்துள்ள 20.5.2017 ஆணை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் இடப்பட்ட ஆணையாகும். ஆனால் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டது **20.5.2017 மேல் முறையீடு** ஆகும். வழக்கறிஞரிடம் கேட்டேன். 20.5.2017 நாளிட்ட மேல்முறையீடு கிடைக்கப் பெறவில்லை. 17.7.2017 நாளிட்ட ஆணையும் கிடைக்க பெறவில்லை என வழக்கறிஞர் கூறிவிட்டார். எனக்கு கூடுதல் அவகாசம் அளித்தால் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட மற்றும் என்னால் 18.9.2017 மனுவில் உறுதி அளிக்கப்பட்டவாறு **20.5.2017 நாளிட்ட எனது மேல் முறையீடு மற்றும் 17.7.2017 நாளிட்ட ஆணை** நகலையும், கால அவகாசத்துக்குள் தவறாது சமர்ப்பிக்கிறேன். **20.5.2017 நாளிட்ட மேல் முறையீடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தின் ஆணையின் (20.5.2017) மீது நான் செய்த மேல் முறையீடு ஆகும்.** 20.5.2017 ல் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தின் ஆணை மீது நான் மேல் முறையீடு செய்தேன். ஏற்கனவே 18.9.2017ல் ஒரு வாரம் அவகாசம் கோரினேன். ஆனால், அவற்றை தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே, எனக்கு மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்திட 25 நாட்கள் கால அவகாசம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வழக்கில் உள்ள கட்டிடம் 2006ல் முடிவடைந்துவிட்டது. எனது தங்கையின் கணவர் பேரூராட்சியின் தலைவராக இருந்தார். திரு. மிதுன்சக்கரவார்த்தியின் தந்தை திரு. அமாவாசை பேரூராட்சியுடைய துணைத்தலைவராக இருந்தார். அவர் அப்போது எனது கட்டிடத்தை வரன்முறை செய்வதற்கு ஆட்சேபணை செய்தார். இல்லையென்றால் நான் அப்போதே வரிவிதிப்பு செய்து செலுத்தி இருப்பேன். 2006-ஆம் ஆண்டு என் தங்கையினுடைய கணவர் மற்றும் என் குடும்பத்தின் மீது திரு. மிதுன்சக்கரவர்த்தி

அவர்களுடைய தந்தை திரு. அமாவாசை பகை கொண்டிருந்தார். எனவே, அவர்கள் 12 வழக்குகள் என் மீதும் பேரூராட்சியின் மீதும் உயர்நீதி மன்றத்தில் தொடுத்தார். எல்லா வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன." என்று மனுதாரர் தெரிவித்தார்.

மேற்கண்டவாறு மனுதாரர் நீதி பேராணை எண். **12225/17 ஐ தவிர வேறு வழக்கு ஏதும் தன்னால் நீதி மன்றத்தில் தொடரப்படவில்லை** எனத் தெரிவித்ததுடன் 1.8.2017 நீதி மன்ற ஆணையில் குறிப்பிட்டுள்ள தனது 20.05.17 நாளிட்ட மேல் முறையீடு (appeal) மனு நகல் மற்றும் 17.7.2017 ஆணை நகலினையும் சமர்ப்பிக்க 25 நாட்கள் கால அவகாசம் கோரினார். இம்முறைமன்ற நடுவ ஆணை எண். 116/2017 நாள்: 20.05.2017 ஐ ஆட்சேபித்து தனது 20.05.2017 நாளிட்ட மேல்முறையீட்டை தாக்கல் செய்ததாக மனுதாரர் கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். ஏனெனில் மேற்படி 20.05.17 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை 29.05.2017 அன்று தான் சுத்த நகலெடுத்து அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க 29.05.2017க்குப் பின்னர் பெறப்பட்ட ஆணைக்கு 20.05.2017ல் மனுதாரர் மேல்முறையீடு செய்வதென்பது எந்த வகையிலும் சாத்தியமற்ற மற்றும் கற்பனைக்கும் எட்டாத நிகழ்வாகும். இருப்பினும், அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு மீண்டும் கால அவகாசம் முறைமன்ற நடுவத்தால் வழங்கப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு, தனது 22.12.2017 நாளிட்ட கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார். மேற்படி கடிதத்தில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

"நான் W.P(MD) No.12225 /2017 என்ற வழக்கினை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை -கிளையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் 20.05.2017 தேதியிட்ட அப்பீல் எண். 662/2016/Peru-Order No.116/2017 எதிர்த்து தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கானது 01.08.2017ம் தேதியில் பட்டியலிடப்படாமல் தவறுதலாக மற்றொரு வழக்கின் வழக்கு விபரங்கள் தவறுதலாக இணை சேர்க்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது.

மேற்படி வழக்கின் தீர்ப்பு என்னுடைய மனுவிற்கு சம்மந்தமில்லாத வகையில் டைப் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதை எதிர்த்து நான் Review Application No.sr.66117 of 2017 ல் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி Review Application நீதியரசர்கள் முன்னிலையில் பட்டியலிட வேண்டி காத்திருப்பில் உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் விபரங்கள் 14.12.2017ம் தேதியில் நான் தங்கள் முன் தெரிவிக்க தவறிவிட்டேன். என்னுடைய கவனக்குறைவை மன்னிக்க வேண்டுகிறேன். மேற்படி Review மனு முடியும் வரை, எனது வழக்கினை தள்ளி வைக்க வேண்டுகிறேன்...." என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் இம்மனுவிற்கு/வழக்கிற்கு சம்மந்தமில்லாத மற்றொரு வழக்கின் விபரங்கள் தவறுதலாக இணை சேர்க்கப்பட்டு W.P. 12225 /2017 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அந்த பிறிதொரு வழக்கு தொடர்பான விவரங்கள் / வாதுரை

நகல் எதனையும் சமர்ப்பிக்கவில்லை. அதே போன்று இது குறித்து சீராய்வு மனு (எண். 66117/17) நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளாரே தவிர அது குறித்தான விவரங்களையோ ஆவண நகல்களையோ தாக்கல் செய்யவில்லை. மேலும், 14.12.2017 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் மேற்குறிப்பிட்ட நீதிப் பேராணை எண். 12225/2017 ஐ தவிர வேறு வழக்கு ஏதும் தொடரப்படவில்லை எனத் தெரிவித்தார். ஆனால், தற்போது மேற்படி கடிதத்தில் பிறிதொரு வழக்குடன், இவ்வழக்கு எண். (W.P.12225/17) இணை சேர்க்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் தாக்கல் செய்வதாக உறுதி அளித்த மேற்படி ஆவணங்களை போதிய அவகாசம் அளித்தும் தாக்கல் செய்யவில்லை.

மேலும், நீதிப் பேராணை எண்.12225/2017ல் 1.8.2017 நாளிட்ட மாண்பமை நீதிமன்ற தீர்ப்புரையில் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத வகையில் இணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்து மறு ஆய்வு மனு மனுதாரரால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் 'செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், மேற்படி நீதிமன்ற ஆணையின்படி இம்முறைமன்ற நடுவத்தின் முன்பாக மீள மனு செய்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மேற்கூறிய 1.8.2017 நாளிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்முறையீடு மற்றும் செயல்முறைகள் இம்முறைமன்ற நடுவத்திற்கு தொடர்பில்லாத நிலையில், மனுதாரரது 18.9.2017 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு உகந்ததல்ல எனக் கருதி அவ்வாறே தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//உத்திரவின்படி –அனுப்பப்படுகிறது//–

சென்னை–600 032

செயலாளர்.

பெறுநர்

1. திரு. து. பாலசுப்பிரமணியம்,
   த/பெ. பெ. துளசிநாதன்,
   க.எண். 3–1–93/1, குமுளி பெரியகுளம் சாலை,
   பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   பழனிசெட்டிபட்டி,
   தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   தேனி மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   தேனி மாவட்டம்.

13/3/18